ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2002/62 - 2017 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2017.01.20

*2002/62 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் இல. 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில் ஹபராதுவ பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 156, அஹுங்கம கிழக்கு கிராம பிரிவில் கொவியபான ஊரில் அமைந்துள்ள கா/4220 ஆம் 1, 2 மற்றும் 3 ஆம் இலக்கத்தைக் கொண்ட மூல வரைபடத்திலுள்ள காணித் துண்டுகளின் விபரங்கள்.

**1. துண்டு இலக்கம் 1**
காணியின் பெயர்: ஒருதொடவத்த; விபரம்: பாழடைந்த நிலம், எச். டப்.எம். ஏ. குணசேகர, மாத்தறை பாதை, கொவியாபான, அஹுங்கம; விஸ்தீரணம்: 0.0007 ஹெக்டயார்

**2. துண்டு இலக்கம் 2**
காணியின் பெயர்: ஒருதொடவத்த; விபரம்: பாழடைந்த நிலம், எச்.யூ. பீ. பிரியந்த, மாத்தறை பாதை, கொவியாபான, அஹுங்கம; விஸ்தீரணம்: 0.0046 ஹெக்டயார்

**3. துண்டு இலக்கம் 3**
காணியின் பெயர்: ஒருதொடவத்த; விபரம்: பாழடைந்த நிலம், பீ. கே. ஏ. பீ. ப்ரனாந்து, 118, வேவெல. ஜாஎல: 0.0003 ஹெக்டயார்

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017ஆம் ஆண்டு மாச்சு மாதம் 7ஆம் திகதி மு. ப 10.00 மணிக்கு ஹபராதுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தரங்கா விக்கிரமரத்ன,
பிரதேச செயலாளர்,
ஹபராதுவ.

ஹபராதுவ பிரதேச செயலாளர் அலுவலகம்,
2017, சனவரி மாதம் 17ஆம் திகதி.

02-298

---

**திருத்தம்**

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

**7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், எம்பிலிபிடிய பிரதேச செயலாளர் பிரிவில், கொலொன்ன கோரலே சிறு பிரிவு, ஹிகுர கிராமத்தில் அமைந்துள்ள, அளவையாளர்களால் தயாரிக்கப்பட்ட நீர் வீதி ஆரம்ப வரைபட இல. 1/40/40 வரைபடத்தின் துண்டுக்காக என்னிடம் இல. 1955/24 மற்றும் 2016.02.26 ஆந் திகதி இல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் அறிவித்தலின் கீழ் 5413 ஆவது துண்டின் சுவீகரித்த காணி விஸ்தீரணம் 0.1092 ஹெக்டயார் தொடர்பாக நில அளவை திணைக்களம் 2016.11.16 ஆம் திகதி அனுப்பப்பட்ட எழுத்தாவணத்தில் துண்டின் விபரம் 0.0065 ஹெக்டயார் என திருத்தம் செய்யப்பட வேண்டும்.

வசந்த குணரத்ன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
எம்பிலிபிடிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
எம்பிலிபிடிய,
2017 சனவரி, 18.

02-299

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*